தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்

சுற்றறிக்கை எண். 122909 / ட்டி3 /2022. நாள்: 19.11.2022

வணிகவியல் தேர்வு க்கான விண்ணப்பங்கள் இயக்கத்தில் சமர்ப்பித்த பின்பு திருத்தங்கள் செய்வதற்கு செலுத்த வேண்டிய அபராதக் கட்டணங்கள்

****

தேர்வர்கள், இணையதளம் மூலம் தேர்வுக்காக விண்ணப்பிக்கும் போது தவறுதலாக விண்ணப்பம் செய்தால் அதனை சரிசெய்யும் பொருட்டு **'Edit Option'** வழங்கப்பட்டுள்ளது. மேலும், தேர்வர்கள் இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை சரிசெய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்த பிறகு தேர்வர்கள் விண்ணப்பத்தை சரி செய்ய கோரும் நிகழ்வில் கீழ்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பங்களை சரிசெய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்த பிறகு திருத்தம் கோரி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் திருத்தங்களுக்கு தகுந்தவாறு அபராதத் (Penalty) தொகை செலுத்த வேண்டும். திருத்தங்கள் செய்வதற்கு ஒவ்வொரு திருத்தத்திற்கும் தனித்தனியாக கட்டணம் செலுத்த வேண்டும்.

மேலும் திருத்தங்கள் செய்வதற்கு அந்தந்த பாடத்திற்குரிய தேர்வு கட்டணத்தில் 100 மடங்கு கட்டணத் தொகை செலுத்த வேண்டும். அதன்பிறகே திருத்தம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஓம்/– க. லட்சுமிபிரியா
தேர்வு வாரியத் தலைவர்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

21/11/22
வட்டார அலுவலர் II